செய்தி வெளியீடு எண்.391/2010 நாள்: 1.6.2010

**வேலூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற பிற்பட்டோர், ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

வேலூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் பிற்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த அதிக மதிப்பெண்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இந்தியன் வங்கி சார்பாக காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். +2 பொதுத் தேர்வில் பிற்படுத்தப்பட்டோர் இனத்தை சேர்ந்த செல்வி என்.கவிதா, செல்வி. டி.ஜனனி, செல்வி.சுப்ரியா ஜிவானந்தம் மற்றும் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த செல்வி.எம்.பிரியதர்ஷினி, செல்வி.கவிருல்லா, செல்வி.திவ்யா ஆகிய 6 மாணவிகளுக்கும் தலா ரூ 5 ஆயிரம் வீதம் ரூ 30 ஆயிரத்திற்கான காசோலைகளையும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிகமதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்டோர் இனத்தை சேர்ந்த செல்வி. அரிணிபிரியா, செல்வி.கௌசல்யா, செல்வி.மொபினா, செல்வி.லோகேஷ்பாபு, ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த செல்வி சர்மிளா, செல்வி தமிழ்வாணி ஆகியோருக்கு தலா ரூ 3 ஆயிரம் வீதம் ரூ 18 ஆயிரத்திற்கான காசோலைகளை மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியன் வங்கியின் மண்டல தலைமை அலுவலர் திரு.ராஜன், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் திரு.சுரேஷ், முன்னோடி வங்கி மேலாளர் திரு.குலோத்துங்கன் மற்றும் மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9.